# விலைகள், கூலிகள், தொழில்நிலை

## பொதுவான விலைமாற்றங்கள்

1986 இல் சில்லறை விலைகள் முன்னைய ஆண்டினைவிட ஓரளவு விரைவாக அதிகரித்தன. 1986 இல் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் முன்னைய ஆண்டின் உயர்வான 1.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 8 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. மாறாக, மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறு உற்பத்தியாளர் விலைகள் 2.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இது 1985 இல் பதிவு செய்யப்பட்ட 15.2 சதவீதமான வீழ்ச்சியுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

1986 இல் நுகர்வோர் விலைகளில் ஏற்பட்ட மிகக்கூடிய உயர்விற்கு பல காரணிகள் உதவின. உணவு உற்பத்தியினைக் கடுமையாகப் பாதித்த பாதகமான வானிலை நிலைமைகள், மலைநாட்டில் போக்குவரத்து வசதிகளில் ஏற்பட்ட தடங்கல், தெங்கு உற்பத்திகளினது விலைகளின் வீழ்ச்சிப்போக்கில் ஏற்பட்ட மாற்றம் என்பன அத்தகைய முக்கிய காரணிகளில் சிலவாகும். அத்துடன் 1985 நவெம்பரில் அறிமுகப்படுத்தப்பட்ட நெல்லிற்கான உயர்ந்த உத்தரவாத விலைகள், இறக்குமதி செய்யப்பட்ட புடவைகள் மீதான தீர்வை விதிப்பு, புகையிலை மதுபானம் மீதான கலால்வரி, மற்றும் உயர்ந்த அஞ்சல் வீதங்கள் போன்ற வரவு செலவுத்திட்ட வழிமுறைகளின் முழுமையான தாக்கமும் 1986இல் உணரப்பட்டது. எனினும் இவ்வாண்டுக் காலத்தில் எரிபொருள், வலு என்பனவற்றின் விலைகளில் காணப்பட்ட உறுதிப்பாடு பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த ஓரளவிற்கு உதவியது. அத்துடன். 1985 இல் தொழிற்பாட்டிலிருந்த கட்டுப்பாடான கொடுகடன் கொள்கைகள் 1986 இல் தொடர்ந்தமையும், மிகையான திரவத் தன்மையை அகற்றுவதற்கான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளும் ஒன்று சேர்ந்து கேள்வியைக் கட்டுப்படுத்துவதில் உதவியதன்மூலம் விலைகளின் மீதான பெரும் தாக்கம் குறைக்கப்பட்டது.

## நுகர்வோர் விலைகள்


1986 இல் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் முன்னைய ஆண்டின் 1.5 சதவீதம் கொண்ட மிகவும் மிதமான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 8 சதவீதத்தினால் உயர்வுற்றது. எனினும் 1986 இன் விலையதிகரிப்புக்கள், இரட்டை எண் வீதங்கள் பதிவுசெய்யப்பட்ட 1978 – 1984 காலப்பகுதியில் நிலவிய வீதங்களை விடக் குறிப்பிடத்தக்களவிற்குக் குறைவாகவே இருந்தன. புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில், அதாவது 1985 திசெம்பரைவிட 1986 திசெம்பரில் அதிகரிப்புவீதம் 9 சதவீதமாக இருந்தது. முன்னைய ஆண்டில் இதுதொடர்பான அதிகரிப்பு 1.5 சதவீதமாக இருந்தது.

முன்னைய ஆண்டின் பல மாதகாலங்களில் சுட்டெண் உண்மையாக வீழ்ச்சியடைந்ததைப் போலன்றி யூன் மாதத்துடன் ஒப்பிடுகையில் யூலை மாதத்தில் மட்டுமே சுட்டெண் 1.2 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்ற வேளையில் 1986 ஆம் ஆண்டின் ஏனைய காலப்பகுதி முழுவதும் விலைகள் உறுதியாக உயர்வடைந்தன. ஆண்டின் முதற்காலாண்டின் விலைகள் 1985 இன் நான்காம் காலாண்டின் இறுதியின் மட்டத்தைவிட 4.8 சதவீதத்தினால் அதிகரித்தன. இரண்டாம், மூன்றும் நான்காம் காலாண்டுகளின் தொடர்பான அதிகரிப்புக்கள் (முன்னைய காலாண்டுடன் ஒப்பிடுகையில்) முறையே 1.8 சதவீதமாகவும் 1.2 சதவீதமாகவும், 2.1 சதவீதமாகவும் இருந்தன.

## மொத்த விற்பனே விலைச் சுட்டெண்

1974 = 100

மாதாந்தம்



உயர்வடைகின்ற உணவு விலைகளே கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் ஏற்பட்ட உயர்விற்கு முதன்மை உதவுகாரணியாக விளங்கியது. உணவிற்கான துணைச்சுட்டெண் (நிறை 61.9%) முன்னைய ஆண்டின் 0.1 சதவீதத்திற்கும் குறைவான விரிவுடன் ஒப்பிடுகையில் 7.2 சதவீதத்தினால் அதிகரித்தது. முக்கிய பல உற்பத்திப் பகுதிகளில் காணப்பட்ட வரட்சி நிலைமைகளின் காரணமாக உற்பத்தியில் ஏற்பட்டவீழ்ச்சி, 1985 நவெம்பரில் நெல்லிற்கான உத்தரவாத விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன 1986 இன் பெரும் பகுதியில் உயர்வான அரிசி விலைகளை ஏற்படுத்தின. உலக சந்தையில் காணப்பட்ட பெருமளவு கேள்வியின் விளைவாக ஆண்டின் இறுதி மாதங்களில் தெங்கின் விலைகள் உயர்ந்தன. மீன், மரக்கறி என்பனவற்றின் உயர்ந்த விலைகளும் உணவுத் தொகுதிக்கான துணைச் சுட்டெண் உயர்விற்குக் காரணமாயிற்று. குறிப்பாக மீனின் வழங்கல் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் காணப்பட்ட குழப்ப நிலைமைகளினால் மோசமாகப் பாதிக்கப்பட்டது.

ஆடைகளின் உயர்ந்த விலைகளும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் குறிப்பிடத்தக்க தாக்கத்தைக் கொண்டிருந்தன. ஆடைக்கான துணைச்சுட்டெண் (நிறை 9.4%) முன்னைய ஆண்டின் 5.4 சதவீதம் கொண்ட உயர்வுடன் ஒப்பிடுகையில் 1986 இல் 15.5 சதவீதத்தினால் அதிகரித்தது. 1985 நவெம்பரில் இறக்குமதிப் புடவைகளின் மீது விதிக்கப்பட்ட 100 சதவீதமான தீர்வையே முக்கிய உதவுகாரணியாக இருந்தது.

1986 நவெம்பரில் மதுபானம், சிகரட் என்பவற்றின் விலைகளில் மேற்கொள்ளப்பட்ட மேல்நோக்கிய திருத்தங்களைத் தொடர்ந்து 1986 இல் பல்வகை விடயங்களுக்கான துணைச்சுட்டெண் முன்னைய ஆண்டின் 5.5 சதவீதமான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 14.4 சதவீதத்தினால் உயர்வடைந்தது.

துறைவகைப்படி உள்நாட்டு விலைகள் முன்னைய ஆண்டின் 6.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 12.2 சதவீதத்தினால் உயர்வடைந்தன. இறக்குமதித்துணைச்சுட்டெண் முன்னைய ஆண்டின் 3.2 சதவீத உயர்வுடன் ஒப்பிடுகையில் 6.8 சதவீதத்தினால் அதிகரித்தது. 1985 இல் 31.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த ஏற்றுமதி விலைகள் 1986 இல் 24.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. ஏற்றுமதித் தொகுதிக்கான விலைகள் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளிலும் வீழ்ச்சியடைந்தன. எனினும் நான்காம் காலாண்டில் மிகக்கூடியளவில் அதிகரித்தது.

### மொத்த விற்பனை விலைகள்

மொத்த விற்பனை விலைச்சுட்டெண் முதன்மைச் சந்தைப் படுத்தல் மட்டங்களில் விலைகளை அளவிடுகின்றது. இருப்பினும், மொத்த விற்பனை விலைச்சுட்டெண்ணில் முக்கிய ஏற்றுமதிப் பண்டங்களின் உயர்ந்தளவு நிறை காரணமாக இப்பண்டங்களின் விலை அசைவுகள் சுட்டெண்ணின் போக்கில் செல்வாக்குச் செலுத்தியது. 1986 இல் மொத்த விற்பனை விலைச்சுட்டெண் 1985 இல் பதிவு செய்யப்பட்ட 15.2 சதவீதம் கொண்ட மிகக் கூடியளவு வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும் புள்ளிக்குப்புள்ளி அடிப்படையில் (1985 திசெம்பரினைவிட 1986 திசெம்பர்) சுட்டெண் 12.7 சதவீதத்தினால் அதிகரித்து 1986 இன் பிற்பகுதியில் ஏற்றுமதிவகை விடயங்களில் உயர்வினைப் பிரதிபலித்தது. முன்னைய ஆண்டில் இது தொடர்பான மாற்றம் 18.2 சதவீதமான வீழ்ச்சியாக இருந்தது. 1986 பெப்புருவரியிலிருந்து மே வரையான

காலப்பகுதியில் சுட்டெண்ணில் ஒரு நிலையான வீழ்ச்சிப்போக்கு அவதானிக்கப் பட்டது. இப்போக்கு யூனிலிருந்து ஒகத்து வரையான காலப்பகுதியில் மாற்ற மடைந்தது. செத்தம்பரில் இச்சுட்டெண் மீண்டுமொருமுறை வீழ்ச்சியடைந்த தெனினும் ஆண்டின் இறுதி மூன்று மாதங்களிலும் மிகக்கூடிய உயர்ச்சிப்போக்கு அவதானிக்கப்பட்டது.

பண்டங்களின் அடிப்படையில், உணவுத் தொகுதிக்கான துணைச் சுட்டெண் 6.6 சதவீதத்தினல் வீழ்ச்சியடைந்தது. முன்னைய ஆண்டில் அதிகரிப்புக்களைக் கொண்டிருந்த தாள் உற்பத்திகள், இரசாயன உற்பத்திகள், உலோக உற்பத்தி கள் அனைத்தினதும் விலைகள் 1986 இல் வீழ்ச்சியடைந்தன. மதுபானம், புடவை காலணி, பொறித்தொகுதி, எரிபொருளும் வெளிச்சமும், பல்வகை விடயங்கள் என்பனவற்றின் விலைகள் உயர்வடைந்த வேளையில் போக்குவரத்துக் கருவிகள், மின்னியல் துணைக்கருவிகள் என்பனவற்றின் விலைகள் சிறிதளவால் அதிகரித்தன. பெற்றோலிய உற்பத்திகளுக்கான துணைச்சுட்டெண் 1984 ஆம் ஆண்டிலிருந்து மாற்றமின்றியிருந்தது.

துறைவகைப்படி, உள்நாட்டு விடயங்களின் விலைகள் முன்னைய ஆண்டு விலைகளுடன் ஒப்பிடத்தக்க வீதத்தில் உயர்வடைந்தன. எனினும் 1986 இல் இறக்குமதி விலைகள் வீழ்ச்சியடைந்தன. ஏற்றுமதி விலைகள் 17.8 சதவீதத் தினல் வீழ்ச்சியடைந்து முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 38.7 சதவீத வீழ்ச்சியிலும் பார்க்க கடுமை குறைந்ததாகவே காணப்பட்டது. ஏற்று மதித் துணைச்சுட்டெண்ணின் போக்கின் குறிப்பிடத்தக்க பண்பு யாதெனில் ஆண்டின் நான்காம் காலாண்டில் மிகக்கூடிய உயர்வு காணப்பட்டமையே யாகும். இது தெங்கு, தெங்கு உற்பத்திகள் என்பனவற்றின் ஏற்றுமதி விலைகளில் காணப்பட்ட மிகக் கூடியளவு அதிகரிப்பு, தேயிலை விலைகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றம் என்பனவற்றின் வெளிப்பாடேயாகும்.

**கூலிகள்**

*1986* இல் நன்கமைந்த துறையின் கூலி அமைப்பில் காணப்பட்ட முக்கிய மானதொரு அபிவிருத்தி யாதெனில் அனைத்து அரச ஊழியர்களின்' *(பள்ளிக்கூட ஆசிரியர் நீங்கலாக) கூலிகளும் மீளமைக்கப்பட்டமையேயாகும். இம்மீளமைப் பின் குறிக்கோள் யாதெனில் ஊழியர்களின் ஆகக்கூடிய சம்பள அளவுகள் தடைப்படுவதனைத் தவிர்ப்பதேயாகும். இது ஒழுங்கற்றதொன்று என்றும் திருத் தியமைப்பது அவசியமானது என்றும் உணரப்பட்டது. புதிய அமைப்பின் குறிப் பிடத்தக்கதொரு பண்பு ஏற்கனவே இருந்த சம்பள அளவுகளின் எண்ணிக்கையை குறைந்தமையாகும். தற்பொழுதுள்ள ஒவ்வொரு சம்பள அளவுகளும் மூன்று பிரிவுகளில் பதினெட்டு சம்பள உயர்வுப் படிகளில் தொழிற்படுத்தப்படுகின்றன. புதிய அளவுகள் நடைமுறைக்கு வந்ததுடன், புதிய சம்பள அளவுகளின் தொடக் கச் சம்பளத்துடன் தொடர்புபட்ட தொடக்கச் சம்பளங்களைக் கொண்ட அனைத்து அலுவலர்களுக்கும் மேலதிக சம்பள உயர்வொன்று வழங்கப்பட்டது. அத்துடன் ஆகக்கூடிய சம்பள அளவினை அடைந்த அலுவலர்களுக்கு சம்பள உயர்வு தடைப் பட்ட காலப்பகுதியின் ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்கும் ஒரு சம்பள உயர்வு


---

* 1986 சனவரியின் மீளமைப்பின் காரணமாக அதனை அடிப்படையாகக் கொண்டு அரச ஊழியர்களுக்கான ஆகக்குறைந் கூலிவீதச் சுட்டெண் திருத்தியமைக்கப்பட்டது. திருத்தப்பட்ட தரவுகள் புள்ளிவிபரப் பின்னி ணைப்பு அட்டவணை 17 இல் தரப்பட்டுள்ளது. இது தொடர்பானதொரு விபரமான தொழில்நுட்பக் குறிப்பு 1987 சனவரிக்கான மத்திய வங்கியின் செய்தித்திரட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

## கூலி வீதச் சுட்டெண்கள்

1978 டிசெம்பர் = 100

காலாண்டுதோறும்




இலங்கை மத்திய வங்கி

வழங்கப்பட்டது. அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப்படி 1985 சனவரியின் ரூ. 504 மட்டத்தில் நிலேத்திருந்தது. அரச பள்ளிக்கூட ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் சம்பள மட்டங்கள் 1985 ஆம் ஆண்டிலிருந்தும் மாற்ற மின்றியிருந்தன,

நன்கமைந்த தனியார்துறையில் கூலி நிர்ணய சபையினுல் உள்ளடக்கப்பட்ட வர்த்தகங்களிலுள்ள அனைத்து ஊழியர்களினதும் பெயரளவுக் கூலிகள் அவர்களின் ஆகக்குறைந்த கூலிவீதச் சுட்டெண்களினுல் அளவிடப்பட்டபடி முன்னைய ஆண்டின் 8.3 சதவீத உயர்வுடன் ஒப்பிடுகையில் 1986 இல் 5.4 சதவீதத்தினுல் அதிகரித்தன. எனினும் 1986 இல் உண்மைக்கூலிகள் 2.4 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தன. வேளாண்மையிலுள்ள தொழிலாளர்களின் பெயரளவுக் கூலி 5.3 சதவீதமான அதிகரிப்பினைக் காட்டிய வேளையில், அவர்களின் உண்மைக் கூலிகள் 2.4 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தன. கைத்தொழில் வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்களின்கூலி முன்னைய ஆண்டின் 11.2 சதவீதம் தொடர்பான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 10.0 சதவீதத்தினுல் உயர்வடைந்தது. இவ்வகைத் தொழிலாளர்களின் உண்மைக் கூலிகள் 1.8 சதவீதத்தினுல் அதிகரித்தன. பணிகளிலுள்ள தொழிலாளர்களின் பெயரளவுக் கூலிகள் 1984ஆம் ஆண்டிலிருந்து மாற்றமின்றி அமைந்திருந்தது. இத் தொழிலாளர்களின் உண்மைக்கூலிகள் 1986 இல் 7.4 சதவீதத்தினுல் வீழ்ச்சியுற்றன.

அட்டவணை 1.27

**கூலி நிர்ணய சபை வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்களின் கூலி வீதச் சுட்டெண்கள்***

| வகை | பெயரளவு கூலிகள் | | | உண்மைக் கூலிகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1985 | 1986 | சதவீத மாற்றம் | 1985 | 1986 | சதவீத மாற்றம் |
| பொதுவான சுட்டெண் ... | 247.9 | 261.3 | 5.4 | 105.7 | 103.2 | — 2.4 |
| துணைத்துறைகள் | | | | | | |
| 1. வேளாண்மையிலுள்ள தொழிலாளர்கள் ... | 273.5 | 288.1 | 5.3 | 116.6 | 113.8 | — 2.4 |
| 2. கைத்தொழில், வர்த்தகம் ஆகிய வற்றில் உள்ள தொழிலாளர்கள் ... | 203.9 | 224.3 | 10.0 | 87.0 | 88.6 | 1.8 |
| 111. பணிகளிலுள்ள தொழிலாளர்கள். ... | 190.7 | 190.7 | — | 81.3 | 75.3 | — 7.4 |

மூலங்கள்: தொழில் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

* பெருந்தோட்ட வர்த்தகத்திலுள்ள கூலி நிர்ணய சபைகளின் கூலிகள் தற்பொழுது மாதாந்த கூலியாக மாத்திரம் நிர்ணயிக்கப்படுவதனுல் 1984இலிருந்துச் சுட்டெண்கள் மாதாந்த கூலியை அடிப்படையாகக் கொண்டு திருத்தப்பட்டன.

## தொழில்நிலை

கிடைக்கத்தக்கதாகவுள்ள தரவுகளின்படி 1986 இல் அரசதுறையில் தொழில் வாய்ப்பு அதிகரித்தது. ஆனுல் அரசுசார்துறையில் இது வீழ்ச்சிய டைந்தது. இது 1985 இல் காணப்பட்டதனை ஒத்திருந்தது. நன்கமைந்த நன் கமையாத தனியார்துறைகள் இரண்டிலும் வேலைவாய்ப்பு அதிகரித்துள்ளமையைக் காணக்கூடியதாகவுள்ளது.

அரசதுறையின் வேலைவாய்ப்பு 1985 இல் மதிப்பிடப்பட்ட 1.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1986 இல் 2.0 சதவீதத்திஞல் அதிகரித்துள்ள தாகத் தற்காலிக மதிப்பீடுகள் காட்டுகின்றன. வேலைவாய்ப்பில் குறிப்பிடத்தக்க விரிவாக்கம் கல்வி, நலத்துறை, உள்நாட்டு வைத்தியம், பாதுகாப்புப்பணிகள், பொதுநிருவாகம், சமூகப்பணிகள் என்பனவற்றில் பதிவுசெய்யப்பட்டது. கிராமிய அபிவிருத்தியும் கட்டுமானமும் துறைகளில் வேலைவாய்ப்பு குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது.

அரசுசார்துறையின் வேலைவாய்ப்பின் வீழ்ச்சியடைந்து செல்லும்போக்கு 1986 இலும் தொடர்ந்து காணப்பட்டது. இத்துறையின் தொழில்நிலை 1985இன் 2.4 சதவீதவீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1986 இல் ஏறக்குறைய 7 சதவீதத்திஞல் வீழ்ச்சியுற்றது. வேலைவாய்ப்பில் கணிசமான வீழ்ச்சிகள் பொறியியல், பயணிகள் போக்குவரத்து, புடவை நெசவு, உருக்கு கனிப்பொருள் மணல்கள், சீமெந்து உற்பத்தி என்பனவற்றுடன் தொடர்புடைய அரசு சார் நிறுவனங்களில் அவதானிக்கப்பட்டது. இதுதவிர அரச பெருந்தோட்டங்களின் தொழில் நிலை மீது கிடைக்கத்தக்கதாகவுள்ள தரவுகளும் ஏறக்குறைய 9 சதவீத வீழ்ச்சியைக் காட்டுகின்றன. இதற்கு மாருக ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி, துறை முகப்பணிகள், தொலைக்காட்சி, பொதுவசதிகள் வழங்கல் என்பனவற்றில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களில் தொழில்நிலை அதிகரித்தது.

தனியார்துறை தொழில் வாய்ப்பு மீதான தொடர்ச்சியான ஆண்டுத்தர வுகள் போதாமையினுலும் ஊழியர் சேமநிதியப் பதிவுகளை அடிப்படையாகக் கொண்ட 1986 இற்கான நன்கமைந்த தனியார்துறையின் வேலைவாய்ப்புப் பற்றிய இறுதி மதிப்பீடுகள் இல்லாமையினுலும் தனியார்துறையின் தொழில் நிலைபற்றிய பொதுவானபோக்குகளை மதிப்பிடுவதற்கு ஏனைய குறிகாட்டிகளை பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. மத்திய வங்கியில் வர்த்தக நடவடிக்கைகளும், திட்டமிடப்பட்ட முதலீடுகளும் என்ற அளவீட்டின்படி தனி யார்த்துறைக் கூட்டு நிலையங்களின் தொழில்நிலை 1984/85 ஆம் ஆண்டினைவிட 1985/86 இல் 15 சதவீதத்திஞல் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளன. இதே மூலத்தின்படி கூட்டுநிலையங்களின் தொழில்நிலை 1986/87 இல் 14 சதவீதத்திஞல் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவின் கீழ் வரும் தொழில் முயற்சிகள் 1985 ஆம் ஆண்டு இறுதியில் 35,786 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கியதுடன் ஒப்பிடுகையில் 1986 இல் 45,047 பேருக்கு வேலை வாய்ப்பை வழங்கியது. இது 9,261 பேரைக்கொண்ட அல்லது 26 சதவீதம் கொண்ட அதி கரிப்பாகும். இதற்கான முக்கியகாரணம் வர்த்தகம் அல்லது மாதிரி உற்பத்தியில் ஈடுபட்ட கூறுகளின் எண்ணிக்கை 14 இனுல் அதிகரித்தமையாகும். 1986 இறுதி யில் தொழிற்பாட்டிலிருந்த 95 கூறுகளில் ஏறக்குறைய 40 சதவீதம் புடவை, நெசவுத்துணிகள், தோல்பொருட்கள் என்பனவற்றின் கீழ் ஏற்பட்டது.

வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக்குழுவினுல் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றி ட்டங்களின் தொழில்நிலை ஈர்ப்பு 1985 இன் 4,339 இலிருந்து 1986 இல் 6,854 இற்கு உயர்வடைந்தது. இத்துடன் வெளிநாட்டு முதலீட்டுமதியுரைக்குழுவினுல் ஒப்புதலளிக்கப்பட்ட கூறுகளின் எண்ணிக்கையும் 1986 இல் 48 சதவீதத்தினுல் அதிகரித்தது. உள்நாட்டு முதலீட்டு மதியுரைக் குழுவினுல் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் வேலைவாய்ப்பும் 1986 இல் 9,659 இனுல் அதிகரித்துள்ள தாக மதிப்பிடப்பட்டுள்ளது. தேசிய வருமான மதிப்பீடுகளின்படி இரண்டாந்தர, மூன்ருந்தர துறைகளின் கூட்டப்பட்ட பெறுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்புகள் முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1986 இல் இத்துறைகளிலான வேலைவாய்ப்பு வசதிசள் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றன.